பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 83

திங்கட்கிழமை
17 பெப்ரவரி 2025

மாசி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## வாகன இறக்குமதி இழுபறி

கொழும்பு, பெப்.17
ஜப்பானின் முன்னணி வங்கிகள் எவையும் இலங்கையின் கடன்கடிதங்களை ஏற்றுக்கொள்வதில்லை என்பதால் வாகனங்களை இறக்குமதி செய்வது 11

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்

# வரவு - செலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றில் முன்வைப்பு!



ஜனாதிபதி அநுர சமர்ப்பிப்பார்

**கொழும்பு, பெப்ரவரி 17**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் கன்னி வரவு - செலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றது. நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றவுள்ளார்.** 11



துயிலுமில்ல அலங்காரத்துக்காக

## கிளிநொச்சி ஆசிரியர் மீது ரி.ஐ.டி.யினர் விசாரணை

கிளிநொச்சி, பெப்.17
கிளிநொச்சியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவருக்குப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 11

ஆறுமாதக் கர்ப்பிணியான

## உதவிப்பிரதேச செயலர் தீக்காயத்தால் உயிரிழப்பு

நீர்வேலியில் பரிதாபச் சம்பவம்



யாழ்ப்பாணம், பெப்.17
தீக்காயங்களுக்கு உள்ளாகிச் சிகிச்சை பெற்றுவந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலராகக் 11

## யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ள சீனாவின் உயர்மட்டக் குழு!

கொழும்பு, பெப்.17
இலங்கை வரவவுள்ள நல்லிணக்கம் மற்றும் இன விவகாரங்களுக்கான சீன அமைச்சர் பான் யூ தலைமையிலான உயர்மட்டக் குழு யாழ்ப்பாணம் வரவுள்ளது. அந்தக் குழு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது. ஜனாதிபதி 11

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் உக்கிரமடைகிறது மோதல்

கொழும்பு, பெப்.17
ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்ளக மோதல் உக்கிரமடைந்துள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. 11

## எதிர்வரும் 3 மாதங்களில் பணவீக்கம் அதிகரிக்கும்

மத்திய வங்கி ஆருடம்

கொழும்பு, பெப்.17
அடுத்துவரும் 3 மாதங்களில் எதிர்பார்க்கப்படும் பணவீக்கத்தில் படிப்படியான அதிகரிப்பு அல்லது நீண்ட கால அதிகரிப்பு ஏற்படக்கூடும் என இலங்கை மத்திய வங்கி இந்த ஆண்டுக்கான 11

## மின்சாரம் தாக்கியதில் 7 வயது சிறுவன் சாவு!

வேலணையில் பரிதாபச் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப்.17
வேலணை, செட்டிபுலத்தைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவன் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் நடந்துள்ளது.
செட்டிபுலம், ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த சந்திரகாந்தன் கனிஸ்டன் (வயது-7) என்ற 11

## கல்சியம் நீக்கியை அருந்தியவர் சாவு!

யாழ்ப்பாணம், பெப்.17
கல்சியல் நீக்கியைத் தவறுதலாக அருந்தியவர் உயிரிழந்துள்ளார். 11

## ஏப்ரல் மாத இறுதியில் உள்ளூராட்சித் தேர்தல்!

கொழும்பு, பெப்.17
உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் ஏப்ரல் இறுதிவாரத்தில் நடைபெறவுள்ளது என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் 11

## நீடித்த காய்ச்சலால் பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப்.17
காய்ச்சல் காரணமாக 67 வயதுப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 11




'துயிலுமில்ல அலங்காரத்துக்கும் நாலாம் மாடிக்கு கூப்பிட்டு விசாரிக்கிறதுதான் மாற்றமோ?'

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் நடந்த

## 80 லட்சம் ரூபா கொள்ளையின் பிரதான சந்தேகநபரும் கைது!

யாழ்ப்பாணம், பெப்.17
யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று 80 லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். 11

இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

## பதில் பொதுச்செயலாளராக எம்.ஏ.சுமந்திரன் நியமனம்

மட்டக்களப்பு, பெப்.17
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய பதில் பொதுச் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.
மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 16.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3991 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 03 08 58 78 |
| விசேட எழுத்து | Q |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 16.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1058 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 06 40 61 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 16.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0017 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 4 7 4 1 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 16.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2097 |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 07 |
| வெற்றி இலக்கங்கள் | 16 56 67 71 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 16.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5749 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 1 8 8 4 0 9 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 16.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1779 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 06 21 28 55 |
| விசேட எழுத்து | Q |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 16.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 324 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 8 4 0 9 |

### இனப்படுகொலைகள் தொடர்பில்

# ஆதாரம் திரட்டும் பொறிமுறைகளை மேலும் வலுப்படுத்தவேண்டும் கனடா

## கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து

**யாழ்பாணம், பெப். 17**

**இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பில் ஆதாரங்கள் திரட்டும் பொறிமுறையை வலுப்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.**

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ்க்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போதே, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தாம் புதியதொரு அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்பப்போவதாக ஏற்கனவே கூறியிருந்தாலும், தற்போதுவரை எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. கடந்த காலத்தை ஒத்த நிலைவரமே இப்போதும் தொடர்கிறது என்ற விடயத்தையும் கனேடியத் தூதுவரின் கவனத்துக்கு கஜேந்திரகுமார் எம்.பி. கொண்டு சென்றார்.

அதேபோன்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல், அரசியல் கைதிகளை விடுவித்தல் என்பன உள்ளடங்கலாக அரசாங்கத்தால் முன்னர் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் உரியவாறு நிறைவேற்றப்படவில்லை என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. இதன்போது தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பெருமளவுக்கு வலுவற்றதெனினும், இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறை வரவேற்கத்தக்கதாகும்.

அந்தச் செயற்றிட்டத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் வலுப்படுத்தப்படவேண்டும். அதற்குரிய அழுத்தங்களை இணையனுசரணை நாடுகளில் ஒன்றான கனடா வழங்கவேண்டும். அத்துடன் கனடாவில் உள்ள சமஷ்டி தொடர்பான தெளிவூட்டலையும் இலங்கைக்கு கனடா வழங்கவேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 16.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0457 | G | 6 8 8 3 3 5 |

**Super Ball DLB**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 16.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | 2723 | N | 14 18 32 74 |

**சனிதா DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 16.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | A | 03 16 62 70 | 4884 |

**SASIRI DLB**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 16.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0624 | 10 13 19 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் | துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 16.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | ♎ | 06 09 29 61 | 4435 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 16.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | P | 07 | 10 20 27 52 | 1899 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 16.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | M | 21 33 37 50 | 2549 |

# மின்னணு கடவுச்சீட்டு துரிதகதியில் பணிகள்

கொழும்பு, பெப். 17

மின்னணு கடவுச்சீட்டு வழங்கும் முறையை செயற்படுத்த தேவையான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக நீதிமன்றம் விதித்த தடைஉத்தரவு தற்போது நீக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மின்னணு கடவுச்சீட்டு வழங்கும் பணியை சுமார் 8 மாதங்களில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது கடவுச்சீட்டு வழங்குவது வழக்கமான நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

ஒரு மில்லியன் புதிய வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளை நாட்டுக்கு இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# விவசாயிகளுக்கு பாதீட்டில் பல்வேறு நிவாரணங்கள்!

கொழும்பு, பெப்.17

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் விவசாயி களுக்கான பல்வேறு நிவாரணங்கள் மற்றும் மானியங்கள் வழங்க முன்மொழியப்பட்டுள்ள தாகத் தொழிற்கல்வி பிரதி அமைச்சர் நலின் ஹேவகே தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிவாரணங்கள் மற்றும் மானியங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் தொழிலை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் தொடர்ந்து முன்னெடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# யானையிலேயே ஐ.தே.க. களம்



கொழும்பு, பெப். 17

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதன் சின்னமான யானைச் சின்னத்தின் கீழ் பல உள்ளூராட்சிமன்றங்களில் போட்டியிட முடிவு செய்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியும் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தின்போது வரவிருக்கும் தேர்தல்கள் மற்றும் தற்போதைய அரசியல் நிலைமை போன்ற முக்கியமானதலைப்புகள் விவாதிக்கப்பட்டுள்ளன.

இதன்போதே கட்சியின் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, 'யானை' சின்னத்தின் கீழ் நான்கு மாநகரசபைகளில் போட்டியிட முன்மொழி யப்பட்டுள்ளது. (ச-இ)

### வடக்கு மாகாணம் உட்பட

# உதவித்தேர்தல் ஆணையாளர்கள் பலருக்கு உடனடி இடமாற்றம்!

கொழும்பு, பெப். 17

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு வெளிவரவுள்ள நிலையில் வடமாகாணம் உட்பட நாடளாவிய ரீதியில் செயற்பட்டுவந்த பல உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கமைய இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய நியமனங்களின்படி வடக்கில் வவுனியா மாவட்டத்துக்கு சி.அமல்ராஜ், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஆர்.சசிலன், மன்னார் மாவட்டத்துக்கு முகுந்தன், கிளிநொச்சி மாவட்டத்துக்கு வே.சிவராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைப்பிரியா, பாலச்சந்திரனை கொன்றவர்களைத் தண்டிப்போம்

அமைச்சர் சரோஜா சாவித்திரி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 17

**ஊடகவியலாளர் இசைப்பிரியா மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினது தலைவரின் மகன் பாலச்சந்திரன் ஆகியோரின் மரணம் தொடர்பில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் நடந்த கொடூர நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் தனித்தனி நிகழ்வுகளாக எடுத்து தனித்தனி நபருக்கான நியாயத்தை வழங்கவேண்டும்.

அதனையும் தாண்டி நாட்டு மக்களின் சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்போம்.

அதேநேரம், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினது தலைவரின் மகன் பாலச்சந்திரனது மரணச் செய்திகேட்டு தான் துயரமடைந்ததாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், ஊடகவியலாளர் இசைப்பிரியா மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினது தலைவரின் மகன் பாலச்சந்திரனது மரணம் தொடர்பில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்.

எனினும் இதுவொரு இலகுவான விடயம் அல்ல - என்றார். (ச-இ)

## வரண்ட வானிலை மேலும் தொடரும்!

கொழும்பு, பெப். 17

இலங்கையில் தற்போது நிலவும் வரண்ட வானிலை மேலும் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

நாட்டில் தற்போது வரட்சியான காலநிலை நிலவு கின்றது. கொழும்பில் இன்று (நேற்று) 28 செல்சியஸாக இருக்கவேண்டிய வெப்பநிலை 31 செல்சியஸாக உயர்ந்துள்ளது. இந்த அதிக வெப்பநிலை மக்களின் அன்றாட நடவடிக்கைகளைப் பாதிப்பதாக அமைந்துள்ளதுடன், அது குறித்து தற்போதைய சூழ்நிலையில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். கடுமையான நீரிழப்பு இதயத்தையும் மூளையையும் பாதிக்கின்றது. இது வெப்பப் பக்கவாதம் என்றும் அழைக்கப்படுகிறது. (ம-இ)

## மன்னார் கடற்பரப்பில் காற்றுப் பலமாக வீசும்

கொழும்பு, பெப். 17

கொழும்பு தொடக்கம் புத்தளம் ஊடாக மன்னார் வரையான கடற்பரப்பில் காற்றுப் பலமாக வீசும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அதன்படி மணித்தியாலத்துக்கு 20 -30 கிலோமீற்றர் வேகத்தில் வடக்கு -கிழக்குத் திசையில் இருந்து காற்றுவீசும்.

அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களிலும் மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும்.

எனவே மீனவர்கள் இந்தக் காலப்பகுதியில் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)




## வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதார உற்பத்தி

மத்திய வங்கி தகவல்

கொழும்பு, பெப். 17

திறமையான தொழிலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதால் ஏற்படும் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்தியில் பின்னடைவு ஏற்படக்கூடும் என இலங்கை மத்திய வங்கி எதிர்வுகூறியுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் முதல் நாணயக் கொள்கை அறிக்கையை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகத் தொழிலாளர்கள் பெருமளவில் வெளியேறுவதும், நிபுணர்களின் இடம்பெயர்வு காரணமாக அனுபவம் வாய்ந்த பணியாளர்களை இழப்பதும் வணிகங்களில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும்.

இது நடுத்தர காலத்தில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் [illegible] றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கட்டுநாயக்கவில் ஹஷிஸ் போதை

கொழும்பு, பெப். 17

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுமார் 360 மில்லியன் ரூபா பெறுமதியான ஹஷிஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கனடாவின் ரொறன்ரோ நகரில் இருந்து கட்டுநாயக்கவுக்கு வருகைதந்த பெண்ணே இந்தப் போதைப்பொருளைக் கடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-இ)




**ஒரு கண்ணில சுண்ணாம்பும் இன்னொரு கண்ணில வெண்ணெயும் வைச்சுப் பாக்கிற பழக்கம் திசைகாட்டிக்காரர் வந்தபிறகும்கூட பொலிஸ்காரரைவிட்டுப் போகேலை. என்ன தான் தங்களை 'படிப்பறிவு இருக்கோ? மோடா' எண்டெல்லாம் செருப்பால அடிச்சமாதிரிப் பேசினாலும் கூட, அவையள் லோச்சனா எம்.பி. யில ஒரு தனிப்பாசத்தோடதான் நடக்கினமாம். போன புறுவத்தன்டைக்கு அந்தப் பச்சைப்புல் வெளி விடுதியில நடந்த கலையாட்டத்தில, ஒருத்தரைக் கலைச்சு கலைச்சு பீங்கான் கோப்பையால அடிச்சு அவரின்ர மண்டையை லோச்சனா எம்.பி. உடைச்சவர். இதில ரண்டு பக்கமும் பிழை இருந்தாலும், ஒராளுக்கு இப்பிடி பெரிய காயம் வாற அளவுக்கு அடிச்சதால லோச்சனா எம்.பியின்ர பக்கம்தான் கூடப்பிழை. உண்மையில இது ஒரு கொலை முயற்சி எண்டு ஆளை உடனேயே அரஸ்ட்டும் பண்ணியிருக்கோனும். அதுக்கு சபாநாயகரின்ர அனுமதி தேவை எண்டதால ஆளை பொலிஸ் ஸ்ரேசனுக்குக் கூப்பிட்டாவது விசாரிச்சிருக்கோனும். ஆனால் இதொண்டுமே நடக்கேலை.**

**இந்தக் கேஸை பெரிசாக்காமல் அப்பிடியே ரண்டு பகுதியையும் சமாதானமாக்கி அனுப்பச் சொல்லி மேலிடத்தில இருந்து பொலிஸ்காரருக்கு பிறசராம். அதாலதான் அவை அடக்கிவாசிச்சவை எண்டு கதை. அதை உண்மையாக்கிற மாதிரி இப்ப அடிவாங்கின தரப்பையும், லோச்சனா எம்.பி. தரப்பையும் சமரசமாக்கி அனுப்பி வைச்சிருக்குது பொலிஸ். இப்பிடி இந்த விசயத்தில புறோக்கர் வேலை பார்த்துத் திரிஞ்ச அதேபொலிஸ்தான், கஜேந்திரகுமார் எம்.பி. விசயத்தில விசர்நாய் மாதிரி பாயினம். இத்தனைக்கும் ஆரோ செய்த 'விகாரை இடிப்பம்' எண்ட போஸ்டருக்காக கஜேந்திரகுமாரில வழக்குப் போட்டு பொலிஸ் ஸ்ரேசனுக்கும், கோர்ட்ஸுக்கும் கூப்பிட்டு விசாரணை, வழக்கு எண்டு தீயா வேலை செய்யினம்.**

**லோச்சனா எம்.பி. ஒராளின்ர மண்டையை உடைச்சதுக்கு வீடியோ ஆதாரமெல்லாம் இருந்தும்கூட, பேய்க்குப் பேன் பார்த்துக்கொண்டிருந்த பொலிஸ்காரர், சைக்கிள் கட்சியை நக்கலடிக்கிறதுக்காக ஆரோ பேஸ்புக்கில செய்து போட்ட பதிவுக்கு கஜேந்திரகுமாரை இப்பிடி அலைக்கழிக்கிறதுதான் திசைகாட்டி அரசாங்கத்தின்ர மக்களாட்சியோ? பொலிசில 'சைபர் கிரைம்' எண்டு ஒரு பிரிவு இருக்கெண்டதையே பொலிஸ்காரர் மறந்திட்டினம் போல. வடிவாத் தேடியிருந்தால் அந்த போஸ்டை ஆர் முதலில போட்டது எண்டு சைபர் கிரைம் காரர் கொஞ்ச நேரத்திலையே கண்டுபிடிச்சிருக்கமுடியும். அதைவிட்டிட்டு, இப்பிடி கஜேந்திரகுமாரை அங்க வா, இஞ்ச வா எண்டு கூப்பிடுறதும், போட்ட வழக்குக்குச் சம்பந்தமில்லாமல் விகாரைக்கு எதிராப் போராடினதைச் சொல்றதும் ஒரு வன்மத்தோடதான் இதையெல்லாம் பொலிஸ்காரர் செய்யினம் எண்டதைத்தான் காட்டுது கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தந்தைவழியில் சில செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாளாக இருக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** புகாரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** அதிர்ஷ்டம் தரும் நாளாக இருக்கும். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சி களைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.


**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களைத் தரும். பொறுமையைக் கடைப் பிடிப்பது நல்லது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கக்கூடும்.

**மகரம்:** அதிர்ஷ்டமும் நல்ல வாய்ப்புகளும் ஏற்படும் நாளாக இருக்கும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். சிலருக்கு பயணங்களால் அனுகூலம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.



# டிறிபேர்க் கல்லூரியின் மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 17

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி மைதானத்தில் கல்லூரி முதல்வர் செ.பேரின்பநாதன் தலைமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற வடக்கு மாகாண கட்டடத் திணைக்களப் பொறியியலாளரும் கல்லூரியின் பழைய மாணவருமான எஸ். சுந்தரகுமார், சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவி திருமதி பி.விமலந்தியா, கௌரவ விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் என். சிறீகாந்தா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-28)

## செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம், பெப்.17

வரணி வடக்கு அ.த.க.பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டி அதிபர் ந.வசந்தரூபன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயக் கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஶ்ரீகுமரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், கௌரவ விருந்தி னர்களாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தெ.கலைவாசன், நலன்விரும்பி திருமதி ச.நவராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-159)

# மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 16

வல்வெட்டித்துறை இமையாணன் அ.த.க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி அதிபர் சி.லிங்கனதாஸ் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.ராஜசீலன், சிறப்பு விருந்தினராக சுவிஸ் பழைய மாணவர் நலன்விரும்பிகள் சங்கச் செயலாளர் இ.இராசகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-159)

## திறனாய்வுப்போட்டி

கொடிகாமம், பெப்.17

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல்1.30மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் க.உமாபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்தியரும் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவருமான மருத்துவக்கலாநிதி வே.பரமநாதன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.நவநீதன், கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். எச்.சி. ரணசிங்க, கௌரவ விருந்தினராக நலன்விரும்பி திருமதி மகேஸ்வரி கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-159)







## உடுவில் மகளிர் கல்லூரி மெய்வன்மைப்போட்டி

கொழும்பு, பெப்.17

உடுவில் மகளிர் கல்லூரியின் 2025ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அதிபர் றொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா இராஜசீலன், தென்னிந்திய திருச்சபையின் செயலாளர் ஆன்மீககுரு சதீஸ்டானியல் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்வி அமைச்சினால் புனரமைக்கப்பட்ட நூலகத்தின் திறப்புவிழா கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நூலகத்தைத் திறந்துவைத்தார். (ச-22,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

கடந்த கால நினைவலைகள் மனிதனை அறிவாளி ஆக்குவதில்லை; வருங்காலம் பற்றிய பொறுப்புணர்ச்சியே அறிவாளிக்கு அடையாளம்.

– பெர்னாரட்ஷா–

# செம்மணி தொடர்கதையா?

மீண்டும் செம்மணி பேசுபொருளாகியிருக்கின்றது. அங்கேயுள்ள இந்துமயானத்தில் புதிய கட்டுமானங்களுக்காக நிலத்தை அகழ்ந்தபோது, மனித எலும்புகள் சில மீட்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த மயானத்தில் இதுவரை எந்தவொரு சடலமும் புதைக்கப்பட்டதான தகவல்கள் எதுவும் இல்லை. அப்படியானால் இந்த எலும்புகள் யாருடையவை ? என்ற கேள்விதான், அங்கு ஒரு மனிதப் புதைகுழி இருக்கலாமோ என்ற சந்தேகத்தைக் கிளறவைத்துள்ளது.ஏனெனில் செம்மணி மனிதப்புதைகுழிகள் இலங்கையை மட்டுமல்ல உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியவை. மனித குலத்துக்கு எதிரான இலங்கை இராணுவத்தினர் கோரங்களை வெளிச்சம் போட்டுக்காட்டியவை. அந்த இடத்தில் மீண்டும் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதென்பது, செம்மணிப் புதைகுழியின் பயங்கரத்தை நாம் முன்னர் முழுமையாகக் கண்டறியாமல் விட்டிருக்கின்றோமா என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், செம்மணி மனிதப் புதைகுழி என்கிற அரசியல் சர்வதேச கவனத்தைப் பெற்றிருந்தது. யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்விகற்ற மாணவி கிரிஷாந்தி குமாரசுவாமி, விபத்தில் உயிரிழந்த சகமாணவியின் மரணவீட்டிற்கு சென்றுவிட்டுத் திரும்பிவந்தபோது செம்மணி இராணுவமுகாமில் தடுத்துவைக்கப்பட்டார். மாணவி கிரிஷாந்தி 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7 ஆம் திகதி இராணுவத்தினரால் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். செம்மணி இராணுவமுகாமில் கிரிஷாந்தி தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியை அறிந்த அவரது தாயார், சகோதரன், அயலவர் உட்பட மூவர் இராணுவமுகாம் நோக்கிச் சென்றனர். எனினும் எவரும் வீடு திரும்பவில்லை.கிரிஷாந்தி காணாமற்போய் 45 நாட்களின் பின்னர், செம்மணி இராணுவமுகாமிலிருந்து, சில மீற்றர் தூரத்தில் கிரிஷாந்தி உட்பட நால்வரது சடலங்களும் தோண்டி எடுக்கப்பட்டன. இதன் பின்னரே செம்மணிப் புதைகுழி விவகாரம் வெளியுலகுக்குத் தெரியவந்தது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து படையினருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டபோது, அவர்கள் 'செம்மணியில் 400 தொடக்கம் 600 பேர் வரை அடித்துக் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டனர்' என்ற தகவலை வெளியிட்டனர்.

அதன்பின்னர் அந்தப் பகுதியில் 1999 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி 27 ஆம் திகதி வரை, அகழ்வு செய்யப்பட்டபோதும் 16 சடலங்களையே மீட்க முடிந்தது. ஏனெனில் அந்தப் பகுதி முற்றுமுழுதாகப் படைக்கட்டுப்பாட்டில் இருந்தது. அதனால் வழக்கு நடைபெறும் சமகாலத்திலேயே அங்கு புதைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மனித உடல்களை படையினர் அகற்றி இருக்கலாம் என்ற சந்தேகம் அப்போதே எழுந்தது. செம்மணி வழக்கு நடைபெற்ற சமயத்தில் அங்கிருந்த இந்துமயானத்தைச் சூழ படையினரின் முகாமும், முன்னரங்க நிலைகளும் இருந்தன. அதனால் அங்கு அகழ்வுப்பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை. இப்போது அங்கே வெளிக்கிளம்பியிருக்கும் மனித எச்சங்கள் பெரும்பாலும் செம்மணிப் புதைகுழியின் நீட்சியாக இருப்பதற்கே வாய்ப்புகள் அதிகம். 2000 ஆண்டில் கண்டறியப்படாத நூற்றுக்கணக்கானோரின் உடல் எச்சங்களை மீட்டெடுக்கவும், செம்மணி மனிதப்புதைகுழியின் முழுமையான கோரத்தை இந்த உலகுக்கு உணர்த்தவும்தான் புதைந்து கிடந்த இந்த மனித எச்சங்கள் செம்மணி மயானத்தில் மீண்டும் வெளிகிளம்பியிருக்கின்றனவோ?





இந்தியப் பயணத்தின்போது

## பிரதமர் மோடியை சந்திக்கிறார் ரணில்

கொழும்பு, பெப். 17

இந்தியப் பிரதமர் மோடியும், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் விரைவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் சனிக்கிழமை இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போதே, அவருக்கும் பிரதமர் மோடிக்கும் இடையில், இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு பெரும் இழுபறியைச் சந்தித்துள்ளது. ஜனாதிபதி அநுர தலைமையிலான இலங்கை அரசாங்கம் சீனாவின் பக்கம் செல்வதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறான பின்னணியிலேயே, ரணிலுக்கும் மோடிக்கும் இடையிலான சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை மிகவும் நம்பிக்கைக்குரிய இலங்கைத் தலைவராக முன்னாள் ஜனாதிபதி ரணில் காணப்படுகின்றார். ரணிலின் தலைமையில் இலங்கையைப் பொருளாதாரப் பின்னடைவுக்குள் இருந்து மீட்பதற்காக இந்தியா ஏராளமான உதவிகளைச் செய்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-இ)


## நுரைச்சோலை வழமைக்கு

கொழும்பு, பெப். 17

நாடளாவிய ரீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட மின்தடையால் செயலிழந்த நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்தின் மூன்று மின்பிறப்பாக்கி இயந்திரங்களும் திருத்தப்பட்டு மீண்டும் செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. அதற்கமைய 3 இயந்திரங்களும் தேசிய மின்கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

ஆண்டுதோறும்

## சிறுநீரகநோயால் 10,000 பேர் உயிரிழப்பு



இலங்கையில் சிறுநீரக நோயால் ஆண்டுதோறும் சுமார் 10 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் சுமார் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறுநீரக நோயாளிகள் உள்ளனர்.

முல்லைத்தீவு, வவுனியா, திருகோண மலை, அம்பாறை, பதுளை, மொனராகலை, பொலநறுவை, அநுராதபுரம், குருநாகல் போன்ற மாவட்டங்களிலேயே அதிகளவான சிறுநீரக நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். வறுமை மற்றும் மருத்துவச்சிகிச்சை பெற்றுக்கொள்ளமுடியாமை போன்ற காரணிகளினால் இந்த நோயால் பாதிக்கப்படுவோர் உயிரிழக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மாணவர்களுக்கு 6,000 ரூபா கொடுப்பனவு

கொழும்பு, பெப். 17

பாடசாலை மாணவர்களுக்கு 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுவருகின்றது என்று தொழிற்கல்வி பிரதி அமைச்சர் நலின் ஹேவகே தெரிவித்துள்ளார்.

300 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு எழுதுபொருள்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கே ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. (ச-இ)


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
செவ்வாய்க்கிழமை - மாசி - 09
18.02.2025
சுபநேரம் : 11.04 - 12.34
ராகுகாலம் : 03.34 - 05.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 09 . 1937



மறைவு 16 . 02 . 2025

## தங்கவேல் தியாகலிங்கம்

(தங்கவேல் அரிசி ஆலை - அநுராதபுரம், வவுனியா,
தங்கவேல் பாமஸி - யாழ்ப்பாணம் ஆகிய நிறுவனங்களின் - உரிமையாளர் )

காரைநகர் தங்கோடை நாவற்கண்டியை பிறப்பிடமாகவும் 24,தாளையடி லேன் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் தியாகலிங்கம் நேற்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் தங்கவேல் (முன்னாள் பிரபல வர்த்தகர் அநுராதபுரம், இந்தியா பிரபல கொன்ரக்ரர்) - தங்கவேல் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேல் கந்தையா (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) - கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், சிவகுமார், காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனுசியாவின் அன்பு மாமனாரும், செந்தூரன், சிவகௌரி, காலஞ்சென்ற சிவாலயன் மற்றும் சிவசாந்தி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், ஜெகசோதி மற்றும் கொங்காதரன், காலஞ்சென்ற சத்தியதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திலகவதியம்மை, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் தனலட்சுமி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2025) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, தாளையடி லேன்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்: தி.சிவகுமார் (மகன்)
077 3784 092, 021 222 3367

(Cs/29809) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 11 . 1939



மறைவு 15 . 02 . 2025

## தையல்நாயகம் சிறீகாந்தா

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் செட்டடித்தெரு நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட தையல்நாயகம் சிறீகாந்தா நேற்றுமுன்தினம் (15.02.2025) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னர் காலஞ்சென்றவர்வகளான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - காமட்சி சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிறீகாந்தாவின் பாசமிகு மனைவியும், பகீரதன், கஜேந்திரன், சஞ்செயன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சிவதர்சினி, யோகவாணி, துளசி ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரா, சனகன், மதுவர்சினி, கீர்த்தன், மறவன், செம்பியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், நாகரத்தினம் மற்றும் செல்லம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2025) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

58 /12, செட்டித்தெரு,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்
076 212 9821

(Cs/29812) N-1

# மரண அறிவித்தல்



மண்ணில் மலர்வு 28.08.1964
விண்ணில் மலர்வு 13.02.2025

## அமரர் செல்வமலர் சிவகுமாரன்

இணுவில் மேற்கு கோவில் வாசலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வமலர் சிவகுமாரன் அவர்கள் கடந்த 13.02.2025 வியாழக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் துரைராசா சிவகுமாரனின் (உரிமையாளர் கணேசன் சென்றர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் - கதிர்காமநாயகி தம்பதியினரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற துரைராசா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சிந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்), சிவகாசிக்கா (Cost Control Engineer) ஆகியோரின் அன்புத்தாயாரும், ரகுநாதன் (உரிமையாளர் - STR Construction), பிரதீபன் (DFCC Bank) ஆகியோரின் பாசத்திற்குரிய மாமியாரும், விஸ்வகன் இன் அன்புப் பேர்த்தியும், ஜெயகுமரன் (நோர்வே), ஜெயகலா (கனடா), ஸ்ரீகலைவாணி (திருகோணமலை), தனகேசவன் (லண்டன்) மற்றும் பிரசாந்தி (ஆசிரியை - யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு சகோதரியும், சண்முகராஜா (சிவசக்தி - வவுனியா), காலஞ் சென்றவர்களான ஏரம்பமூர்த்தி, சிவானந்தன் ஆகியோரின் அன்பு மருமகளும், கருணை தவசோதியின் பெறாமகளும், நந்தினி (நோர்வே), கணேசகுமார் (துறைமுக அதிகாரசபை - திருகோணமலை), பிரதீபா (லண்டன்), சுரபாஸ்கரன் (ஆசிரியர் - யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி, சின்னராசா, அருட்செல்வி, காலஞ்சென்ற யோகதாஸ் மற்றும் காலஞ்சென்ற சிவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், லோகநாயகி, கமலாம்பிகை ஆகியோரின் சகலியும், ஸ்ரீதரன் (மைத்துனியின் கணவர்) யதுர்சன், ஜனகன், அஸ்வின், அவ்யா ஆகியோரின் பெரியம்மாவும், ஞானலோஜினி, கோகுலன், இராகுலன் (வைத்தியர்), கோபிதன், சர்மிலன் (வைத்தியர்), பிரதீபன், சிவரூபன், நிதேஷன் ஆகியோரின் சிறிய தாயும், யகதுகஷா, தீப்தன், ஷாருகேசி, ஆரங்கன், சஹானா, நிறஞ்சலா, லக்ஷாயினி ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியாவில் அன்னாரின் இல்லத்தில் (கே.கே.எஸ்.வீதி, இணுவில் மேற்கு இணுவில்) நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இணுவில் மேற்கு,

தகவல்: குடும்பத்தினர்
077 612 8424
077 991 7533

(CR/44341) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அல்லிக்குட்டி சின்னத்துரை

**தோற்றம்**
**21.03.1944**

**மறைவு**
**14.02.2025**



சிறுப்பிட்டி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட அல்லிக்குட்டி சின்னத்துரை அவர்கள் கடந்த 14.02.2025 வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அல்லிக்குட்டி - இளையப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ் சென்ற கந்தசாமி, செல்லத்துரை, சின்னராசா, சரஸ்வதி, கமலாதேவி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமார சாமியின் மைத்துனரும், ஜெயலட்சுமி, ஜெயரஞ்சனி, ஜெயகிருஷ்ணா, ஜெயரூபனா, ஜெயச்சந்திரா, ஜெயச்சித்திரா, ஜெயபாரதி, ஜெயரூபவேல், ஜெயகுலவேல், ஜெயசக்தி வேல், ஜெயராஜவேல், ஜெயப்பிரகாஷ், ஜெயதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகன், நந்தகுமாரன், அம்மலன், சந்திர காந்தன், சிவபாதம், லிந்துசா, சிந்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயபிரசாந், ஜெயபிரவீன், ஜெயபிரவீனா, பிரவீன், தர்ஷாயின், கிஷாணி, தர்மிகா, கிரேஷாந், பிரியாளினி, ரிச்சார்கோமைக்கிருஷ்ணா, ஜெய கௌரி, மரியூஸ், அஸ்விகா, அஸ்வின் மகஸ்வி, வாமன், மதியூஸ் ஆரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (18.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் சிறுப்பிட்டியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியை களுக்காக மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**

**பிள்ளைகள், மருமக்கள், குடும்பத்தினர்.**


| | |
|---|---|
| தர்சன் | - 0094(77)1336855 |
| பிரகாஷ் | - 0094(76)7141176 |
| பாரத் | - 0094(777)073628 |
| குலம் | - 076 792 7707 |

மடத்தடி வீதி,
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

(CR 44344) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அப்புத்துரை சந்திரசேகரம்

அளவெட்டியை பிறப்பிடமாகவும் ஜேர்மணியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை சந்திரசேகரம் கடந்த (15.02.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அப்புத்துரை அன்னபூரணம் அவர்களின் மகனும் சிவபூரணேஸ்வரியின் அன்புக் கணவரும் சந்திரமோகன். சந்திரகாசன். சந்திர மணாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அனிதா மணாளனின் அன்பு மாமனாரும் மணாளினியின் பாசப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2025) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மகாஜனா கல்லூரி வீதி**
**அம்பனை**
**தெல்லிப்பளை**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 615 4301**

(CS 44044) V-1

# மரண அறிவித்தல்



## அமரர் செல்லத்துரை இராசம்மா (அன்னம்மா)

அச்சுவேலி தெற்கை பிறப்பிடமாகவும் வவுனியா, சுவிஸை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசம்மா அவர்கள் கடந்த (11.02.2025) சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை, மகேஸ்வரி, மற்றும் இராஜேஸ்வரி, திலகவதி, மனோன்மணி, தட்சணாமூர்த்தி ஆகியோரின் சகோதரியும் சாந்தகுமாரி, சாந்தகுமார், தேவகுமார், சந்திரகுமாரி, இராசகுமார், பிரியகுமாரி ஆகியோரின் தாயாரும், குமாரசிங்கம், சசிதரன், விஜி, முரளிதரன், வினோத் ஆகியோரின் மாமியாரும் சுப்பிரமணியம், கதிரவேலு, துரைராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை (18.02.2025) சுவிஸில் நடைபெறும் அன்னாரின் அஞ்சலி, ஆத்மாசாந்தி நிகழ்வு விக்னேஸ்வரா வீதியில் அமைந்துள்ள கிருஸ்னர் திலகவதி இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பெறாமகள்**
**[illegible]**

(CR 44343) V-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 07 . 03 . 1952

இறப்பு 16 . 02 . 2025

## சிவானந்தன் ஜெயரதி

மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கிழக்கு சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தன் ஜெயரதி நேற்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராஜேஸ்வரி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சீவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவானந்தன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், வினோதினி (ஆசிரியை - யா / மாதகல் சென்யோசப் மகாவித்தியாலயம்), வித்தகன் (ஆசிரியர்- யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வரதி (லண்டன்), சுமதி, முரளிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சற்குணானந்தன் அவர்களின் மைத்துனியும், இராஜமுகுந்தன் (முகாமையாளர், ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம் - பரந்தன்), விரோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்தனா (மருத்துவபீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), சாதனா, விவேகன், விஹாசினி, விசாகன் (யாழ்ப் பாணக்கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2025) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வட்டுக்கிழக்கு,**
**சித்தன்கேணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(Cs/) N-1

# மரண அறிவித்தல்



## காசிப்பிள்ளை சிவஞானேஸ்வரி (கிளி)

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை சிவஞானேஸ்வரி நேற்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தையன்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற காசாளர் ப.நோ.கூ.சங்கம் கைதடி) பாசமிகு மனைவியும் வசந்தினி (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-மாவட்ட செயலகம்), பவதாரணி (லண்டன்), பவதர்சிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற அதிபர் யா/குருசாமி வித்தியாலயம்), சிவகுமாரன் (கனடா), விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும் கௌரீதரன் (கிராம அலுவலர்-தென்மராட்சி), மயூரகிரிநாதன் (லண்டன்), சபேஷ்காந் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், குகதரன், அருணன் (மாணவர்கள் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) சாருணன், சஞ்சனா, மதுவர்சா, கதிர்சனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் செல்வநாயகம் (ஓய்வுபெற்ற F.A பிரதேச செயலகம் தென்மராட்சி), சசிகலா (கனடா), காலஞ்சென்றவர்களான சிவநாதன், சின்னம்மா, சிவயோகநாதன் மற்றும் தங்கமுத்து, செல்லம்மா, சிவபாக்கியம், சிவனேஸ்வரி, சிவஞனசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2025) செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**077 356 2936 - மகள் விஜி**
**076 628 9344 - பரமேஸ்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 2544) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலியான குற்றச்சாட்டுகளால் அரசாங்கத்தை வீழ்த்த முடியாது

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



**கொழும்பு, பெப். 17**
**போலியான குற்றச்சாட்டுக்கள் மூலம் எமது அரசாங்கத்தை வீழ்த்தமுடியாது. ஏனெனில் எமது பாதுகாப்பே மக்கள்தான் என்று பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது அரசியலுடனும், எமது அரசியற் கலாசாரத்துடனும், எங்களின் கொள்கைப் பிரகடனத்துடனும் எதிர்க்கட்சிகளால் மோதமுடியாது. அது அவர்களால் நினைத்துப்பார்க்க முடியாத காரியம். அதனால், பொய்களைக் கூறி ஆட்சியைப் பிடிப்பதற்கு எதிர்க் கட்சிகள் சதிசெய்கின்றன.
எங்கள் மீது முன்வைக்கப்படும் தொடர்ச்சியான குற்றச்சாட்டுகள் போலியானவை என்பதை மக்கள் அறிவார்கள். அவர்கள் அதை அறிந்ததால்தான் நாங்கள் ஆட்சியில் இருக்கின்றோம்.
எனவே, போலியான குற்றச்சாட்டுகளால் எம்மைப் பலமிழக்கவைக்கலாம் என்று எதிர்க்கட்சிகள் பகற்கனவு காண்பது அர்த்தமற்றது.
உள்ளூராட்சித் தேர்தலை தற்போது நடத்தாமல் காலம் தாழ்த்துமாறு எதிர்க்கட்சிகள் தேர்தல்கள் ஆணைக் குழுவில் கோரிக்கையை முன்வைத்துள்ளன. இப்போதும் பாருங்கள் அவர்கள் மக்களிடம் செல்லவேயில்லை. இவ்வாறான கோழைகளால் எவ்வாறு எம்மை வீழ்த்தமுடியும்? மக்களே எங்களின் பலம். அவர்களே எம்மைப் பாதுகாக்கின்றனர் - என்றார். (ம-44)

# பெண் எம்.பி. வடக்குக்குத் தேவை

### பிரதமர் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், பெப் 17
அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் வட மாகாணத்தில் விசேடமாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிச்சயம் தெரிவாகவேண்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.
யாழ். சண்டிலிப்பாயில் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
வரலாற்றில் முதன்முதலாக வடக்கில் வெற்றிபெற்ற அரசாங்கமே இன்று ஆட்சியிலுள்ளது. வரலாற்றில் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதும் எமது நாடாளுமன்றமே.
அடுத்த தேர்தலில் யாழ்ப்பாணத்திலிருந்து பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பவேண்டும்.
வடக்கிலிருந்து மிகத் தலைமைத்துவம் வாய்ந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமக்குத் தேவை. நாம் அனைவரும் ஒரு நாட்டுப் பிரஜைகள் ஆவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-22,125)

# குருபூஜை தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், பெப்.17
யாழ். சைவபரிபாலனசபை புண்ணிய நாச்சியம்மையார் குருபூஜை தினமும் சைவநெறித் தேர்வுப் பரிசளிப்பு விழாவும் சைவபரிபாலனசபைத் தலைவர் உ.தயானந்தன் தலைமையில் இல.66,நாவலர் கல்லூரி வீதியிலுள்ள ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் புதன்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்.சி.ஸ்ரீசற்குணராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

# மியான்மரில் சிக்குண்ட இலங்கையர் மீட்கப்படுவர்

### வெளிவிவகார அமைச்சு தகவல்

கொழும்பு, பெப். 17
மியான்மரில் இணையவழி மோசடி முகாமில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
இலங்கையர்கள் 56 பேர் வேலைவாய்ப்புக்காகத் தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் மியான்மரின் பயங்கரவாதக் குழுவால் கடத்தப்பட்டு சட்டவிரோத சைபர் அடிமைகள் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
கடந்த ஆண்டு அவர்களில் சுமார் 32 இலங்கையர்கள் மீட்கப்பட்டனர். எஞ்சியுள்ள 14 இலங்கையர்கள் விரைவில் விடுவிக்கப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்படவுள்ளனர் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# ஐ.தே.க.- ஐ.ம.ச. இணைவு தேர்தலுக்குமுன் சாத்தியமில்லை

கொழும்பு, பெப்.17
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றுக்கான பொதுக் கூட்டணி முயற்சி உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு முன்னர் கைகூடாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.
இதனால் உள்ளூராட்சித் தேர்தலை இவ்விரு கட்சிகளும் தனித்தனியாகவே எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-44)



# விளையாட்டுத்துறை அமைச்சர் யாழ்ப்பாணம் வருகை

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில்குமார கமகே நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்தார்.
அவரும், யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனும் இணைந்து யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கைப் பார்வையிட்டனர்.
இதன்போது துரையப்பா விளையாட்டு அரங்கின் தேவைப்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டன.
மேலும் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணி தொடர்பாகவும், அதனுடைய தற்போதைய நிலைமை தொடர்பாகவும் அமைச்சர் கலந்துரையாடினார். (ஜ-66,27)



# அரசின் கொள்கைகளால் மாபியாக்கள் தலைதூக்கும்


### சம்பிக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 17
மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திட்டங்களே இன்று நாட்டில் பிரதான மின்னுற்பத்தி மூலங்களாகவுள்ளன.
இதனைச் சீர்குலைக்கும் வேலைத்திட்டங்களைத் தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.
இந்தச் செயற்பாடு மீண்டும் நிலக்கரி மற்றும் டீசல் மாபியாக்களைத் தலைதூக்கச் செய்வதற்கான நடவடிக்கையே என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்படுவதற்கு முதல் நாள், அதாவது கடந்த 7ஆம் திகதி இலங்கை மின்சாரசபையால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
காற்றாலை, சூரிய மற்றும் நீர் மின்னுற்பத்திகளை வரையறுப்பது தொடர்பிலேயே அந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.
மன்னார் காற்றலை மின்உற்பத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு 5 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளதாக அதானி நிறுவனம் முதலீட்டு சபைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு ஏனைய முதலீட்டாளர்களும் சிந்திப்பர்.
எதிர்வரும் காலங்களில் இவற்றை முற்றாக இல்லாமலாக்குவதற்கான நடவடிக்கைகளையே தற்போது அரசாங்கம் முன்னெடுத்துள்ளது- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கலாசாலைகள்மூலம் பயிற்சி

## பிரதமர் ஹரிணியிடம் அதிபர் லலீசன் கோரிக்கை




**யாழ்ப்பாணம், பெப். 17**

**கல்வி மறுசீரமைப்பில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியை அல்லது பட்டப்பின் கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான பயிற்சியை கலாசாலைகளால் மேற்கொள்ளமுடியும். அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தெரிவித்துள்ளார்.**

கோப்பாய் கலாசாலையில் சீரமைக்கப்பட்ட கிருஷ்ணை படிப்பகம் பிரதமர் ஹரிணியால் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வின்போது அதிபர் லலீசன் மேலும் தெரிவித்ததாவது:-

கலாசாலைகளுக்கு உள்வாங்கப்படுவோர் தற்போது குறைவடைந்து வருகின்றனர். ஆங்கிலம் உடற்கல்வித் துறைகளில் டிப்ளோமோ பட்டம்பெற்ற ஆசிரியர்கள், உயர்தரத் தகைமையுடன் போட்டிப் பரீட்சையில் உள்வாங்கப்பட்ட ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், தனியார் பாடசாலை ஆசிரியர்கள், பிரிவேனா ஆசிரியர்கள் பயிற்சிக்காக கலாசாலைகளுக்கு உள்வாங்கப்படுகின்றனர். தற்போது இத்தகைய ஆசிரியர் நியமனங்கள் குறைவடைந்து உள்ளமையால் கலாசாலைகளுக்கு உள்வாங்கப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

தேசிய கல்வி நிறுவகம் பட்டப்பின் கல்வி டிப்ளோமோக் கற்கையை பகுதி நேரமாக பாடசாலை ஆசிரியர்களின் உதவியுடன் நடத்திவருகிறது. இதனை முழுநேரக் கற்கையாக மாற்றி கலாசாலைகள் ஊடாக குறைந்த செலவில் நடைமுறைப்படுத்தமுடியும். மேலும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உரிய வாண்மைத்துவப் பயிற்சிகளை பாடசாலை ஆசிரியர்களின் கொள்ளளவு விருத்திப்பாடப் பயிற்சிகளை கலாசாலைகள் ஊடாக வழங்க முடியும் கல்வி மறுசீரமைப்பில் ஆசிரியர் கல்விக்கு முக்கிய இடம் வழங்கப்பட வேண்டும். 2009ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆசிரியர் கல்வியின் பாடத்திட்டம் இதுவரை மாற்றி அமைக்கப்படவில்லை என்பது துரதிஷ்டவசமானது. பாடசாலை கல்வி வளம் பெறுவதற்கு ஆசிரியர் கல்வி உரமாக அமையவேண்டும். சேர் பொன் இராமநாதன் நீண்ட கனவுடன் இந்தக் கலாசாலை உருவாகப் பங்களிப்புசெய்தார். கலாசாலை என்ற பெயர் நிலைத்துநிற்குமாறு கல்வி மறுசீரமைப்பில் கலாசாலைகளை மாற்றி அமைக்குமாறு முன்மொழிவை வழங்குகிறோம் என்றார். (ம-66)



## உண்ணாவிரதியுடன் முன்னணியினர் சந்திப்பு

கிளிநொச்சி, பெப். 17

முள்ளிவாய்க்காலில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முன்னாள் போராளி வனகுலராசாவை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் முன்னாள் போராளியான அழகரத்தினம் வனகுலராசா பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துச் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைக் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்துத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றார். இந்த நிலையில் அவரை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்காலுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். (ச-66)



## இயக்கச்சி சவேரியார் ஆலயம் யாழ்.ஆயரால் திறந்துவைப்பு!

கிளிநொச்சி, பெப்.17

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இயக்கச்சி புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் யாழ். ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் அருட்தந்தையினர், கட்டைக்காடு, செம்பியன்பற்று பங்குமக்கள்,பொது மக்கள், இராணுவத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-41-27)





## சந்நிதியான் ஆச்சிரம நிதியில் புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

வவுனியா, பெப். 17

வவுனியா வடகாடு பிரமணாலங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டட அடிக்கல் நடும் விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல்11 மணியளவில் அறநெறிப் பாடசாலையின் ஆசிரியர் திருமதி சுகுணா முகுந்தன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் சம்பிரதாயபூர்வமாக அடிக்கல் நட்டுவைத்தார்.

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் இரண்டு மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் குறித்த புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (ச-66)



வடக்கு மாகாண

## அதிபர் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

வடமாகாண அதிபர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்றுக் காலை சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போது புதிய நிர்வாக சபையில் தலைவராக நா.மகேந்திரராஜா, செயலாளராக ஜெ.கோகுலவாசன், பொருளாளராக கஜேந்திரன், பிரதித் தலைவராக முருகதாசன், உப செயலாளராக கு.திலீபன், ஊடக இணைப்பாளராக [illegible] கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-28)

கடை வாடகைக்கு உண்டு
கல்வியங்காடு பிரதான வீதி,
3ம் கட்டையில் கடை
வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 077 175 0746
(CS/25286) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவு- ...

வரவு - செலவுத் திட்டத்தின் முன்னோடியான ஒதுக்கீட்டுச்சட்டமூலம் கடந்த ஜனவரி 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முதலாம் வாசிப்புக்கென முன்வைக்கப்பட்டது. தற்போது இரண்டாம் வாசிப்பான, வரவு - செலவுத் திட்ட வாசிப்பு இன்று முற்பகல் 10.30 மணிக்கு ஜனாதிபதியால் நிகழ்த்தப்படவுள்ளது.

2025ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல், எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கான அரசாங்கத்தின் செலவினமாக 4 ஆயிரத்து 218 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு அரசாங்க செலவீனமாக 6 ஆயிரத்து 978 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டிருந்தது. அந்த வகையில் கடந்த வருடத்தைவிட இம்முறை அரச செலவினம் குறைவடைந்துள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 713 பில்லியன் ரூபா இந்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சுக்கு 442 பில்லியன் ரூபாவும், சுகாதாரம் அமைச்சுக்கும் ஊடகத்துறை அமைச்சுக்கும் 507 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆவது வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை ஏழு நாள்கள் இடம்பெறவுள்ளது. அத்துடன் பெப்ரவரி 25ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு தொடர்பான குழுநிலை விவாதம் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதிவரை 4 சனிக்கிழமை நாள்கள் உள்ளடங்கலாக 19 நாள்கள் இடம்பெறவுள்ளது. அதற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதி பி.ப 6 மணிக்கு நடத்தப்படவுள்ளது. (அ-எ-44)

## யாழ்ப்பாணத்துக்கு..

ஜி ஜின்பிங்கின் அமைச்சரவையின் முக்கியமான உறுப்பினரான பான் யூ, சீனாவின் சிறுபான்மை விவகாரங்களைக் கையாளுகின்றார். இவர் தலைமையிலான குழு ஐந்துநாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு எதிர்வரும் புதன்கிழமை இலங்கை வருகின்றது. இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் பான் யூ, இன நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடல்களை முன்னெடுக்க உள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார மற்றும் புத்தசாசனம், மத மற்றும் கலாசார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி உள்ளிட்ட அதிகாரிகளுடன் சீனத் தரப்பு விரிவான கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளது. (அ-எ-இ)

## ஐக்கிய...

ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டணி உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டே மோதல் ஆரம்பமானது எனவும், அது தற்போது வலுவடைந்துள்ளது எனவும் கூறப்படுகின்றது.

அதேபோல நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவை, ஐக்கிய மக்கள் சக்தியின் மேல் மட்டம் ஓரங்கட்டுகின்றது என்றும் கூறப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் மாவட்டத் தலைவர்கள் நியமனம் சில நாள்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது. கொழும்பு மாவட்ட தலைமைப்பதவியை கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தன்னகத்தே வைத்துக்கொண்டுள்ளார். கொழும்பு மாவட்டத் தலைவர் பதவி ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவருக்கு கோட்டைத்தொகுதி அமைப்பாளர் பதவி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஹர்ஷ டி சில்வா அதிருப்தியில் இருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது .

எனினும், தனக்கும் ஹர்ஷ டி சில்வாவுக்கும் இடையில் எவ்வித பிரச்சினையும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார். இதற்கிடையில் கட்சிமீது அதிருப்தியில் இருக்கும் ஹிருணிக்காவை, கொழும்பு மேயர் வேட்பாளராக களமிறக்கி சமரசப்படுத்துவதற்குரிய ஏற்பாடும் இடம்பெறுகின்றது. (அ-எ-44)

## பதில்...

இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. பதில் பொதுச் செயலாளர் பதவி வகித்த ப.சத்தியலிங்கம் சுகவீனம் காரணமாக அந்தப் பதவியைத் தொடர்ந்து வகிக்கமுடியாது என்று தெரிவித்தத்தை அடுத்தே, அந்தப் பதவிக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-எ-இ)

## எதிர்வரும்...

அதன் முதல் நாணயக் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் ஜனவரி மாத கணக்கெடுப்பின்படி, அரசாங்கச் செலவினம் மற்றும் ஊதிய உயர்வு, தனியார் வாகன இறக்குமதி மீதான தடையைத் தளர்த்துவதன் மூலம் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, உலகளாவிய பொருள்களின் விலை உயர்வு மற்றும் பண்டிகை மாதங்களின் காணப்படும் அதிகரித்த பொருள்களின் தேவை போன்ற காரணிகளால், எதிர்வரும் 3 மாதங்களில் எதிர்பார்க்கப்படும் பணவீக்கத்தில் படிப்படியான அதிகரிப்பு ஏற்படக்கூடும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேநேரம், உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள், விசேடமாக அமெரிக்காவில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் வெளிநாட்டுத் துறையின் செயல்திறனைப் பாதிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஏற்படும் கொள்கை மாற்றங்கள், இலங்கையின் வெளிநாட்டுத் துறைக்கு முக்கியமாக உலகளாவிய வர்த்தகம், முதலீடு, மூலதன ஓட்டங்கள், பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தக்கூடும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## 80 லட்சம்...

இந்தச் சம்பவம் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. வெளிநாடு அனுப்புவதாகத் தெரிவித்து இளைஞரை அழைத்து காரில் கடத்திச்சென்று அச்சுறுத்தி வங்கிக் கணக்கில் இருந்த 80 லட்சம் ரூபா பணம் வெறொரு வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இரு ஆண்களும், இரு பெண்களும் ஏற்கனவேகைது செய்யப்பட்டு [illegible] நீதிமன்றில் [illegible] விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கடத்தல் மற்றும் கொள்ளைச் சம்பவங்களைத் திட்டமிட்டார் என்று கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர், டுபாய்க்குச் செல்ல முயன்ற நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் 27 வயதுடையவர் என்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளார். (அ-எ-26)

## ஏப்ரல்...

இருந்து அறியமுடிகின்றது. பெரும்பாலும் ஏப்ரல் 26ஆம் திகதியை தேர்தல் தினமாக அறிவிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு பரிசீலித்துவருகின்றது எனத் தெரியவருகின்றது.

உள்ளாட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டவரைவு மீது நாடாளுமன்றத்தில் இன்று திங்கட்கிழமை விவாதம் நடைபெறவுள்ளது.

இன்று மாலையே சட்டவரைவை நிறைவேற்றுவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. சபையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை சபாநாயகர் நாளை சான்றுறுதிப்படுத்திய பின்னர் சட்டம் நடைமுறைக்கு வரும். அதன்பின்னர் 14 நாள்களுக்கு பிறகு வேட்புமனுத் தாக்கலுக்குரிய அறிவித்தல் வெளியாகும். அதேவேளை, உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான வேட்புமனு கோரும் அறிவித்தலை ஏப்ரல் நடுப்பகுதியில் வெளியிடவேண்டும் என்று எதிரணிகள், தேர்தல் ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-44)

## நீடித்த...

மிருசுவில், விடத்தல்பளையைச் சேர்ந்த ந. புஷ்பராணி (வயது-67) என்பவரே உயிரிந்துள்ளார்.

நான்கு நாள்கள் காய்ச்சல் நீடித்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி சாவகச்சேரி மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காகச் சென்றபோது மயங்கி வீழ்ந்துள்ளார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று உயிரிந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## கல்சியம்...

திருநெல்வேலியைச் சேர்ந்த தாசன் மைக்கல் (வயது-85) என்பவரே உயிரிந்தவராவார்.

கடந்த 14ஆம் திகதி தண்ணீர் என நினைத்து கல்சியம் நீக்கியை இவர் அருந்திய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## உதவிப்...

கடமையாற்றிய, நீர்வேலியைச் சேர்ந்த சதீஸ் தமிழினி (வயது-33) என்பவரே உயிரிந்தவராவார். இவர் ஒரு பிள்ளையின் தாயாவார்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை படுக்கை அறையில் நுளம்புத்திரி எரிந்து ஏற்பட்ட தீ [illegible] கடும் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டார்.

ஆறு மாதக் கர்ப்பிணியாகவிருந்த இவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, தாய் மற்றும் ஆறு மாத சிசுவை உயிருடன் மீட்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அந்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. அவரது கணவரும் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-28-9-66-26)

## கிளிநொச்சி...

2024ஆம் ஆண்டு பாடசாலையொன்றில் இல்ல மெய்வன்மைப் போட்டியில் கனகபுரம் துயிலுமில்ல நுழைவாயில் போன்று அலங்கரிக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளுக்காகவே அவர் கொழும்பிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் தலைமையகத்துக்கு இன்று திங்கட்கிழமை அழைக்கப்பட்டுள்ளார். அந்த அலங்கார வடிவமைப்புக்கு உதவிய மாணவர்களின் பெயர்ப்பட்டியலைக் கொண்டுவர வேண்டும் என்றும் ஆசிரியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ச-28)

## மின்சாரம்...

சிறுவனே உயிரிழந்தவராவார். அயல் வீடொன்றில் நடக்கவிருந்த நிகழ்வொன்றுக்காக அலங்கரிப்புக்குப் பயன்படுத்தி எஞ்சிய மின்குமிழ்கள் வயருடன் போடப்பட்டிருந்துள்ளது. அவற்றில் ஒன்றை எடுத்துவந்து மின் இணைப்புக்கொடுக்க முயன்றபோது சிறுவன் மின் தாக்கத்துக்கு இலக்காகித் தூக்கியெறியப்பட்டுள்ளார் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவனை உறவினர்கள் வேலணை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே சிறுவன் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை தீவக திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நா.தியாகராசா மேற்கொண்டார்.

உயிரிழந்த சிறுவனின் உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-26-27)

## கடன்...

சிக்கலாகியுள்ளது என்று தெரியவருகின்றது.


இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை இறக்குமதியாளர்கள் சங்கம், வாகன இறக்குமதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை களுக்கு அரசாங்கம் அவசரமாகத் தீர்வுகளை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

சுமார் 5 ஆண்டுகளாகத் தனியார் போக்குவரத்து வாகனங்களுக்கான இறக்குமதி தடைசெய்யப்பட்டிருந்த நிலையில், கடந்த முதலாம் திகதி முதல் வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி அளித்திருந்தது.

ஆனால் ஜப்பானின் வங்கிகள் இலங்கையின் கடன்கடிதங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதால் வாகன இறக்குமதி செய்வது தொடர்ந்தும் தாமதிக்கப்பட்டு வருகின்றது. (அ-எ-இ)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உக்ரைனின் கனிமங்களை அபகரிக்க அமெ. முயற்சி



*உக்ரைன் அதிபர் பரபரப்புக் குற்றச்சாட்டு*

**கீவ், பெப். 17**

**உக்ரைனின் கனிமவளங்களை அபகரிப்பதற்கு அமெரிக்கா முயற்சிகளை மேற்கொள்கின்றது என்று உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.**

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான போரை நிறுத்துவதற்கான முன்மொழிவொன்றை அமெரிக்கா வழங்கியுள்ளது. அந்த முன்மொழிவுக்கு ஒப்புதல் வழங்கமாட்டோம் என்று ஷெலன்ஸ்கி ஏற்கனவே அறிவித்திருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே, உக்ரைனின் கனிம வளங்களில் 50 வீதத்துக்கும் மேற்பட்டவற்றை அபகரிப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என்று ஷெலன்ஸ்கி கூறியுள்ளார்.

உக்ரைனின் வளங்களைப் பிரித்தெடுப்பதிலும், அதைச் சந்தைப்படுத்துவதிலும் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், போரை நிறுத்துவதாகக் கூறிக் கொண்டுவந்த அமெரிக்கா, உக்ரைனின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என்ற பெயரில் கனிமங்களையே தற்போது இலக்கு வைத்துள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்பால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைதி உடன்படிக்கை மிகவும் ஆபத்தான அம்சங்களைக் கொண்டுள்ளது என்று உக்ரைனின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி தற்போது ஜேர்மனியில் நடைபெறும் பாதுகாப்புசார் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டுள்ளார்.

அந்த மாநாட்டில்வைத்து, அவசர அவசரமாக அந்த உடன்படிக்கையில் கையொப்பம் பெறும் நடவடிக்கைகளும் அமெரிக்கத் தரப்பால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அதிபர் ஷெலன்ஸ்கி கையொப்பமிட மறுத்துவிட்டார் என்று சர்வதேச ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

# இராணுவத்தின் கடவுச்சீட்டுகளை ஒப்படைக்கப்பணிப்பு

கொழும்பு, பெப்.17

மேஜர் தரத்துக்குக் கீழுள்ள அனைத்து இராணுவத்தினரும் கடவுச்சீட்டை அந்தந்தப் படைப்பிரிவுகளிடம் ஒப்படைக்கவேண்டும் என்று இலங்கை இராணுவம் பணித்துள்ளது.

இராணுவத்தினரின் அமைதி காக்கும் கடமைகள் மற்றும்வெளிநாட்டுப்பயிற்சியை விரைவுப்படுத்துவற்கான திட்டங்களுக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (எ-இ)



## புதுடில்லி ரயில் நிலையத்தில் சனநெரிசலில் சிக்கி 18 பேர் பலி

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் உள்ள தொடருந்து நிலையமொன்றில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்குண்டு 3 சிறுவர்கள் உள்ளடங்களாக 18 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பிரயாக்ராஜ் பகுதியில் நடைபெறும் மகா கும்ப மேளா நிகழ்வில் பங்கேற்பதற்காகத் தொடருந்தில் ஏறுவதற்கு முயற்சித்த பயணிகளே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இந்தியத் தொடருந்துத்துறை அமைச்சு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. (ச-இ)

## தனிமனித பாதுகாப்பை உறுதிசெய்யவேண்டும்

பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

நாட்டில் ஆண்கள்கூட சுதந்திரமாக நடமாட முடியாத சூழ்நிலை தற்காலத்தில் காணப்படுகின்ற நிலையில் தனிமனித பாதுகாப்பு உறுதிசெய்யப்படவேண்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்த அவர் சண்டிலிப்பாயில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேலைசெய்யும் இடத்தில் பாதுகாப்பு இல்லை. பெண்கள் முன்னைய காலத்தில் தெய்வேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை முனைவரை தனியாக சென்றுவரும் சூழல் காணப்பட்டது. ஆனால் இன்று பெண்கள் மாத்திரமல்ல. ஆண்கள்கூட தனியாகச் செல்லமுடியாத சூழல் காணப்படுகின்றது. எனவே தனிமனிதப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் - என்றார். (ச-125)

## உக்ரைன் விவகாரத்தில் பேசக்கூடாது ஐரோப்பா!

*அமெரிக்கா முறுகல் நிலை*

**வொஷிங்டன், பெப். 17**

**ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையிலான அமைதிப் பேச்சு வார்த்தைகளின்போது, ஐரோப்பாவின் கருத்துக்களுக்கு இடம் வழங்கப்படாது என்று அமெரிக்கா அறிவித்துள் ளது.**

மில்லியன் கணக்கான உயிர்களைக் காப்பாற்றுவதற்காகவே நாங்கள் ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருகின்றோம். ஆதலால், பேச்சுவார்த்தைகளில் பின்னடைவுகளையும், தாக்கங்களையும் ஏற்படுத்தக்கூடிய ஐரோப்பாவின் செயற்பாடுகளை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்தக் கருத்துக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. ஐரோப்பிய நாடுகள் இல்லாமல் உக்ரைன் தொடர்பிலோ அல்லது அதன் எதிர்காலம் தொடர்பிலோ எந்தவொரு முடிவும் எடுக்கப்பட முடியாது. அதை ஐரோப்பா வலுவாக எதிர்க்கும் என்று பின்லாந்து கடுமையாகக் கண்டித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, உக்ரைன் தொடர்பான காத்திரமான முடிவுகளை எடுப்பதற்காக ஐரோப்பியத் தலைவர்கள் அடுத்தவாரம் விசேட சந்திப்பில் ஈடுபடவுள்ளனர். பிரான்ஸின் அதிபர் மக்ரோனின் தலைமையில் பரிஸில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

வாடகைக்கு
வீடு / காரியாலய உபயோகத்திற்கு
55 அடி நீளம், 44 அடி அகலம், பரப்புடைய
மாடி வீடு வாடகைக்கு உண்டு.
இடம் : டச்சு வீதி, சாவகச்சேரி.
தொடர்புகளுக்கு:-
077 675 7249
(CS/29811) J-1

மணமகன் தேவை
யாழ் இந்து 1984 இல் பிறந்த அவுஸ்ரேலியாவில் வசிக்கும் Accountant ஆக தொழில்புரியும் மணமகளுக்கு பட்டம் பெற்ற அவுஸ்ரேலியாவில் வசிக்கும் மணமகன் தேவை.
076 249 5401, 076 162 4584

சிறுநீரகம் தேவை
"O" குருதி வகை சேர்ந்த ஒருவருக்கு "O" குருதிவகை சிறுநீரகம் அவசரமாக தேவை.
42 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
HLA Report இருப்பின் Whatsapp பண்ணவும்.
076 540 6732 (Whatsapp/ Call)
077 545 2892
(CS/57524) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org